காரை மண்ணின் அழைப்புமணி ஓய்ந்தது.

கண்ணீர் அஞ்சலி.

நான்கு தசாப்த்தங்களுக்கு மேலாக நற்பணியாற்றிவந்த
“களபூமி முத்தமிழ் பேரவை” இன் தியாகச் சுடர் அணைந்தது. ,

காரைநகர் மண்ணின் பழமையானதும், பெருமைமிக்கதும் மற்றும் எமது மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை, கடந்த 4 தசாப்த்தங்களுக்கு மேலாக எடுத்தியம்பி வந்த “முத்தமிழ் பேரவையின்“ அறங்காவலர் மறைந்த திருமதி நடராஜா இராசமலர் அவர்களின் மறைவு எமது பிரித்தானிய காரை நலன்புரி சங்கத்தை மட்டுமன்றி காரை மக்கள் அனைவரையும் கண்ணீர் சொரிய வைத்துள்ளது.

மேற்படி முத்தமிழ் பேரவை, 1978ம் ஆண்டில், மறைந்த திருமதி நடராஜா இராசமலரின் துணைவர் மைசூர் நடராஜா என்று காரை மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட மறைந்த திரு .ஆறுமுகம் நடராசா அவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும், ஊர்பற்றும் மிக்க தயாளகுணத்தோன் மறைந்த திரு ஆறுமுகம் நடராசா அவர்கள் ஒட்டுமொத்த காரைநகரிற்கே பல பெருமைகளை தேடித்தந்தவர்.

1971ம் ஆண்டு வித்துவான் பிராங்ளின் சேல்லேரியன் செல்லையா நடராஜா ( F X C Nadarajah) அவர்களால் வெளியிடப்பட்ட “காரை மான்மியம்“ நூல் வெளிவர இவரும் ஒரு காரணகர்த்தா ஆவார் ( இன் நூலின் முதல் பதிப்பிற்கு பதிப்புரை வழங்கியுள்ளார்). கொழும்பு விவேகானந்தா வீதியில் “இரஞ்சனா” எனும் பெயரில் பதிப்பகம் ஒன்றையும் நடாத்தி வந்தார்.

தமிழன் தமிழனுடன் தமிழிலேயே பேசவேண்டும் என்று “தமிழ் உலகம்“ எனும் அரும் பத்திரிகை ஒன்றையும் மொழி வளர்க்கும் தொலைநோக்கில் தன் சொந்த நிதியில் வெளியிட்டு வந்தார்.

இப் பேரவையானது காரைநகர் முழுவதும் பரந்துபட்டளவில் பாகுபாடின்றி கலை நிகழ்வுகளை முன்னெடுத்து வந்துள்ளது. முத்தமிழ் பேரவையின் கலை நிகழ்வுகளை பல இடங்களிலும் மேடையேற்றியுள்ளார். குறிப்பாக பட்டு மாமா அவர்களின் நல்லியக்க சபையில் பலதடவைகள் இந்நிகழ்வுகள் விருதுகளையும் பெற்றுள்ளது.

அன்னாரின் மறைவுக்கு பின்னர் (1983ம் ஆண்டு) இவரது துணைவியார் திருமதி இராசமலர் அவர்கள் இத் தமிழ்ப் பேரவையை பல இன்னல்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வந்துள்ளார். 1991 இடம் பெயர்வுக்கு பின்னர் 2005 இல் இருந்து தனது சொந்த நிதி மூலமும், கனடாவில் உள்ள இவரது சகோதரர்களின் உதவி மூலமும், மற்றும் ஒருசில தனிநபர் உதவிகள் மூலமும் இயக்கி

வந்திருக்கிறார். கனடா காரை கலாச்சார மன்றமும் இக்காலத்தில் பெரிதும் உதவியுள்ளது.

28/04/2016, 12/09/2016 திகதிகளில் அன்னாரின் நிதியுதவி கோரிக்கைகளை பிரித்தானிய காரை நலன்புரி சங்கம் பூர்த்திசெய்தது மட்டுமன்றி அன்னாருடன் எமது சங்கம் நெருங்கிய தொடர்பில் இருந்து வந்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பழமையானதும், பெருமைமிக்கதுமான இப்பேரவையை இவர் மறைவுக்கு பின்னர் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல அனைத்து காரைமக்களும் முன்வர வேண்டுமென்று அன்பான கோரிக்கையை முன்வைத்து, திண்ணைபுர சிவனை பிரார்த்திப்போமாக.

மறைந்த திருமதி. நடராஜா இராசமலர் அம்மா ஆத்மா சாந்தியடைய
பிரித்தானிய காரை நலன்புரி சங்கத்தினர்
எல்லாம் வல்ல அந்த சுந்தரேசுவரனை வேண்டுகின்றனர்.
அதேநேரம் அவரது குடும்பத்தாருக்கு பிரித்தானிய காரை நலன்புரி சங்கத்தினர்
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றனர்.

““செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்““

நிர்வாகம்
பிருத்தானியா காரை நலன்புரி சங்கம் .
14 – 12 – 2018